# வடவரையை மத்தாக்கி

## பண் பழந்தக்க ராகம் (சுத்த ஸாவேரி)

## ரூபக தாளம்

## (சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவை பாடல்)

*வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்*
*கடல்வண்ணன் பண்டொரு நாள் கடல் வயிறு கலக்கினையே*
*கலக்கிய கை யசோதையார் கடை கயிற்றாற் கட்டுண்கை*
*மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே*

*அறுபொரு ளிவனென்றே அமரர் கணந் தொழுதேத்த*
*உறுபசியொன் றின்றியே யுலகடைய உண்டனையே*
*உண்டவாய் களவினான் உறிவெண்ணெய் உண்டல்வாய்*
*வண்டுழாய் மலையாய் மாயமோ மருட்கைத்தே*

*திரண்டமரர் தொழுதேத்தும் திருமால் நின் செங்கமல*
*இரண்டடியான் மூவுலகும் இருள்தீர நடந்தனையே*
*நடந்த அடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்த அடி*
*மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே*

✠✠✠✠✠✠✠✠✠✠